# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,888—1970 ජනවාරි 9 වැනි සිකුරාදා—1970.1.9**

14,888 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 25 | ஆயவிற்பனேயும், குத்தகை விற்பனேயும் .. .. | 41 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 31 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 32 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனேகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனேயும் பிறவும் .. .. | — | நானுவித அறிவித்தல்கள் .. .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனேகள் "**

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனேகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளேகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளே கள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங் கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளேப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களேயொழிந்த ஏனேயோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத் தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினு லும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ் வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணே செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலேவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணே) கட்டளேச் சட்டத்தின் பிர காரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத் தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதி யுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்த ரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவி களுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத் தர்களின்' தகுதிகாண்/சோதனேக் காலம் எப்பதவி சம்பந்த மாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண் டாகும்.*

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலேக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. A. 100/X. 2183/69

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பண்ணைத் தொழில்நுட்பவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவிகள்

*கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பண்ணைத் தொழில்நுட்பவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் இடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.*

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 1970.2.9.
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 1970.2.16.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்;

(ii) **விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது** தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. **விண்ணப்பங்கள்** அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்;

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்

களாகவிருக்கின்றுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720 — 12 × 360 — ரூ. 11,040/- வருடாந்தம் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் குளியாப்பிட்டியா கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக் கல்லூரிக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும் ;

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970.2.9 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) (i) அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் விவசாயத்தில் அல்லது விலங்கு விஞ்ஞானத்தில் வழங்கப்படும் பட்டத்துடன் பண்ணை ஆண்மையில்/தொழில் நுட்பவியலில் அனுபவம் ;

அல்லது

(ii) அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது நிலையத்தால் பண்ணைத் தொழிலில் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் ;

(இ) தெகிவளை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப்பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்ந்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
**1970 ம் ௵ ஜனவரி ௴ 2 ந் ௳.**

**1-228/1—9.1.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888**

---

**இல. AA 106/X 2188/69**

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கான பதவிகள்

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திணைக்களத்தால், வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில், பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாய் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : **9.2.1970**

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : **16.2.1970**

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வோர் 9″ × 4″ அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஓர் கடிதவுறையில் தமது சொந்த முகவரியை எழுதி கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

**(ii)** விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடத்துக்குத் தாமே பொறுப்பாவார்.

**(iii)** வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ்விண்ணப்பதாரர் விரும்பினுல் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

**(iv) மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாவென்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லு

மாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தரமானவையும், இளைப்பாற்றுச் சம்பளமுடையவைகளுமாகும். விதவையர் அனுதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்துதல் வேண்டும்.

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு : ஆண்டொன்றுக்கு ரூ. 6,720—12 × 360 உம் 11 × 480— ரூ.16,320 வரையும் ரூ. 11,520 க்கு முன்னும் ரூ. 14,400 க்கு முன்னும் வினைத் திறமைகாண் தடையுமுண்டு. (இது 1.10.69 க்கு முன்னிருந்த, ஆண்டொன்று ரூபா 4,080—12 × 360 உம் 10 × 480—13,200 வரையுமுள்ள அடிப்படைச் சம்பளத் திட்டத்தையுடையது).

குறிப்பு.—ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பெறவேண்டியவைகள்—

(i) (அ) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையின் கலாநிதிப்பட்டம் ;

(ஆ) அதிபர் வரிசைப்பட்டம் அல்லது மண் யந்திரவியல், கொங்கிறீற் நுண்கலை, நீரியல், ஆகிய விசேட பாடங்களில் ஏதேனும் ஒன்றிலும், சம்பளத் திட்டத்தின் ரூ. 11,040/– என்ற சம்பள முனையைக் கடப்பதற்கு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் நீரியல் துறையில் ஒரு வருட முழு நேரப்பயிற்சி பெற்றிருத்தலும் வேண்டும் ;

(ii) மேற்கூறப்பட்டுள்ள உயர் பட்டதாரி தகைமைகளுடன் சேவையில் சேருவோர் ரூபா 7,800/– என்ற திரட்டிய வேதனத்தில் நியமனம் செய்யப்படுவர்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று :—

(அ) அவர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970.2.9 ந் திகதியில் 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுஎல்லை கணிக்கப்படமாட்டாது). விசேட உயர் பட்டதாரிப் பட்டமுடைய விண்ணப்பதாரருக்கு வயது எல்லை 35 ;

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் பின்வரும் பாடங்களாகிய கணித சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் அல்லது ரசாயன சாஸ்திரம் ஆகியவற்றில் ஒன்றிலேனும் முதலாம் தர அல்லது இரண்டாம் தர விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் எந்திரவியல் கல்விப்பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் பொது விஞ்ஞான தரப்பட்டம் பெற்று, அதோடு மேற்கூறப்பட்ட பாடங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுடன் உதவி ஆராய்ச்சியாளராக 10 வருடங்கள் சேவை செய்துள்ள இத்திணைக்கள உத்தியோகத்தர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

5. விண்ணப்பதாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ். (சமைய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாண தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற் தகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/உயர் தொழிற் தகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிட்டுள்ளது). அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு, விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பங்களைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையெதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு தை மீ 2 ந உ.

1–228/2—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

இல. A 90/ × 2189/69

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் சமூகக் கல்வி விரிவுரையாளர்—II ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் சமூகக் கல்வி விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1970.2.9.

(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.2.16.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்ப படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள்

வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம் ;

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம், செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720 — 12 × 360 — ரூ. 11,040 வருடாந்தம் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும், தற்போது காலியிடங்கள் தெகிவலை, கேகாலை, பலாலி, பொல்கொல்லை, குளியாப்பிட்டியா, காலி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு ; தெரிவு செய்யப்படுவர்கள் இக்கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும் ;

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும் ;

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(அ) 1970.2.9 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) (i) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் இரண்டு பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—குறைந்தபட்சம் ஒரு பாடம் (1), (2) ஆகிய உப-பந்திகள் ஒவ்வொன்றில் அடங்குவதாக இருக்க வேண்டும்)

(1) பொருளியல், கல்வி, சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், தத்துவ சாத்திரம்,

(2) புவியியல், சரித்திரம் ;

(ii) பல்கலைக் கழகத்தில் கற்பிப்பதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் அல்லது ஆசிரியர் கலாசாலையில் அல்லது உயர்தரக் கல்வி மட்டத்தில் அல்லது இவ்விரண்டிலும் கற்பிப்பதில் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(இ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் ;

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம் ;

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களங்களிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந உ.

1–228/3—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

A 91/X 2190/69

## கனிட்ட பல்கலை கழகக் கல்லூரிகளில் நூல்நிலையவியல் விரிவுரையாளர்—II ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் நூல்நிலையவியல் விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1970.2.9 ;

(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.2.16.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா எப்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு

எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720—12 × 360—ரூ 11,040 வருடாந்தம் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் தெகிவலை, பலாலி, கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக் கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும் ;

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட கலாத்துக்குத் தகுதிகான் முறையில் அமையும் ;

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970.2.9 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு அவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ;

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது அதே அந்தஸ்துடைய நிலையத்தால் நடாத்தப்படும் ஒரு கழகவாண்டுக்குக் குறையாத கலா நூல்நிலையவியல் பயிற்சி நெறி ஒன்றினைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் ;

(iii) க. பொ. த. (சாதாரணதர) பத்திர அல்லது சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தி அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். (பட்டப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்தி அடைந்தவர்களுக்கே இத்தேவை அமையும்) ;

அல்லது

க. பெ. த. (சாதாரணதர) பத்திர அல்லது சி. பா.த. பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தி அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். (பட்டப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழி மூலம் சித்தி அடைந்தவர்களுக்கே இத்தேவை அமையும்) ;

(iv) நூல் நிலைய வேலையில் அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(இ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவுசெய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில், தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந் உ.

1–228/4—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## இலங்கை தரைப்படை
### படையினர் நியமனம்

1969 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12 ந் திகதி வெளியான 14,884 இலக்கத்தையுடைய அரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி, தொகுதி (II) ல் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட விளம்பரம் கீழ்க் கண்டவாறு திருத்தப்படுகின்றது :—

(1) 2 (ஆ) பந்தியில் கூறப்பட்டுள்ளதை கீறிட்டு அதற்குப் பதிலாக : "1970.2.14 திகதியன்று 18 வயதுக்குட்பட்டவராயும் 40 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்."

(2) 6 (ஆ) பந்தியில் 4 ம் வரியில் கூறப்பட்டுள்ளதைக் கீறிட்டு அதற்குப்பதிலாக :

"1970 ஆம் வருடம் மாசி மாதம் 14 ம் திகதி பி.ப. 4.30 மணிக்கு."

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
பிரதான அதிகாரி,
தரைப்படைத் தளபதிக்காக.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1970 ம் ஆண்டு சனவரி மீ 3 ந் உ.

1–307—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## சமூகசேவைத் திணைக்களம்
### இணைப்பு உத்தியோகத்தர்—சமூக சேவைத் திணைக்களம்

5.12.69 ந் தேதி அரசாங்க வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்பட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதி 22.11.69 ந் தேதி அறிவித்தல் தொடர்பாக மேற்குறிப்பிட்டுள்ள 23.1.1970 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப் படுகிறது.

சமூக சேவைத் திணைக்களம்,
த. பெ. 577,
பாலதக்ச மாவத்தை,
காலிமுகம்,
கொழும்பு–3,
31.12.69.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவை அதிபர்.

1–233—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி
### அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை—மார்ச் 1970

மேற்படி பரீட்சை 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம், 21 ந் திகதிகளில் நடைபெறும். இப் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர் கள் தங்கள் விண்ணப்பங்களை 1970 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 3 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதித் தலைவர்களுக்கூடாக/ உள்ளூர் அலுவலகத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந் உ.

1–313—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## சுங்க இணைப்புச் சேவை

969 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி நிர் 14,884 இல் பக்கம் 1269 ல் பகுதி I : பிரிவு (II) (விளம்பரம்) பின்வரும் திருத்தம் இடம் பெறுகிறது.

6. பரீட்சை எடுப்பதற்குத் தகுதியளிக்கும் பொது நிபந்தனைகள்—

(iii) பரீட்சார்த்திகள் குறைந்த பட்சம் பின்வருவனவற்றில் தராதரப் பத்திரங்கள் உடையவராயிருத்தல் வேண்டும்.

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்கு குறையாத ஒரு பரீட்சையில் ஆங்கிலமும், எண்கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடல்களில் சித்தியெய்தியவராகவும் அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் அல்லது அதனிலும் மேலான பரீட்சையில் ஒரே முறையில் மூன்று பாடங்களில் சித்தியும் ;

(iv) பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி 17 வயதுக்குக் குறையாதவர்களாயும் 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி 24 வயதுக்கு மேற்படாதவர் களாயும் இருப்பதாகத் திருப்திகரமான சான்று அளிக்க வேண்டும்.

7. விண்ணப்பங்கள்—

(ii) விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் பிரதான சுங்க சேகரிப்பாளர், த. பெ. இல. 518, கொழும்பு 1 என்னும் விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(iv) ஏற்கெனவே அரசாங்கப் பகுதிகளில் அலுவல் பார்க்கும் பரீட் சார்த்திகள், தாங்கள் கடமையாற்றும் அரசாங்கப் பகுதிகளின் தலைவர்களின் ஊடாகவே தங்கள் விண்ணப்பங்களை அனுப் புதல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதியன்றோ அதற்கு முன்பதாகவோ பிரதான சுங்கச்சேகரிப் பாளரிடம் சேரும் வண்ணம் தங்கள் விண்ணணங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து, பரீட்சார்த்தி கள் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பிரதான சுங்க சேகரிப்பாளர்.

மா. ம. சுங்கம்,
கொழும்பு 1, 1970 ஆம் ஆண்டு சனவரி மீ 4 ந் உ.

1–254—9.1.70 திகதிய வர்த்தமானி இல. 14,888

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தரைப்படைத் தலைமை நிலையம்—கொழும்பு

1969/70 ஆண்டிற்கான தரைப்படைத் தலைமை நிலையத்தினுல் கோரப்பட்ட கேள்விப்பத்திரங்களில் கீழ்க்காணப்படும் கேள்விப்பத்திரங்கள் கடைசித் தீர்மானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கேள்விப்பத்திரங்களுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள எண்கள் கிடைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களின் தொகையாகும்.

| கிடைக்கப் பட்ட கேள்விப் பத்திரங் களின் தொகை | சேவை | இடம் | சித்தியடைந்துள்ள கேள்வியாளர் |
|---|---|---|---|
| 8 .. | தரைப்படை, அரச இலங்கை கடற்படை, அரச இலங்கை ஆகாயப்படை ஆகியவற்றிற்கு மரக்கறி, பழவகை, தேங்காய்கள், பண்ணை பொருட்கள் ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | கொழும்பு | .. திருமதி எஸ். பி. என். குணரட்ண, 212/53' கேஸ்வர்க் வீதி, கொழும்பு 11 |
| 5 .. | ஷை .. .. .. | தியத்தலாவை | .. திரு. எஸ். எம். ஏ. அசீஸ், இறைச்சிக் கடை, தியத்தலாவை |
| 3 .. | தரைப்படை, அரச இலங்கை கடற்படை, அரச இலங்கை ஆகாயப் படை ஆகியவற்றிற்கு புது மீன்கள் விநியோகஞ் செய்வதற்கு | தியத்தலாவை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், 212/49 ஈ, கேஸ் வர்க் வீதி, கொழும்பு 11 |
| 3 .. | தரைப்படை, அரச இலங்கை கடற்படை, அரச இலங்கை ஆகாயப் படை ஆகியவற்றிற்கு இறைச்சி விநியோகஞ் செய்வதற்கு | கொழும்பு | .. திரு. எம். டி. ஆர். அலெக்சண்டர், 36, பாலித இடம், கொழும்பு 9 |
| 2 .. | ஷை .. .. .. | தியத்தலாவை | .. திரு. எஸ். எம். ஏ. அசீஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 7 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழவகைகள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள் ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | பணுகொடை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 5 .. | தரைப்படைக்கு மட்டும் புது மீன்கள் விநியோகஞ் செய்வதற்கு | பணுகொடை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | தரைப்படைக்கு மட்டும் இறைச்சி விநியோகஞ் செய்வதற்கு .. | பணுகொடை | .. திரு. எம். வை. எஸ். மொகிடீன், 62/1, ஆரம்யா வீதி, தெமடகொடை, கொழும்பு |
| 6 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள் ஆகியவற்றையும், பண்ணைப் பொருட்களையும் விநியோகஞ் செய்வதற்கு | கடுகுருந்தை | .. திருமதி எஸ். பி. என். குணரட்ண, மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | தரைப்படைக்கு மட்டும் புது மீன்கள் விநியோகஞ் செய்வதற்கு | கடுகுருந்தை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 2 .. | தரைப்படைக்கு மட்டும் இறைச்சி விநியோகஞ் செய்வதற்கு .. | கடுகுருந்தை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 3 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | தள்ளாடி | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 3 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | தோட்டவெளி | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | தரைப்படைக்குப் புது மீன்கள் விநியோகஞ் செய்வதற்கு .. | தள்ளாடி | .. திரு. ஏ. ஏ. ல. எம். குசைன், ஏ. பி. வீதி, எருக்கலம்பிட்டி |
| 4 .. | தரைப்படைக்கு மட்டும் புது மீன்கள் விநியோகஞ் செய்வதற்கு | தோட்டவெளி | .. மேஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 5 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள் ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | கன்தளை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 6 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள் ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | அம்பாரை | .. திரு. எஸ். பொன்னம்பலம், 3, ஆசுப்பத்திரி வீதி, அம்பாரை |
| 3 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிவகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | சிலாபத்துறை | .. திரு. எஸ். எஸ். செல்லதுரை, முதலாம் குறிச்சி, மரதானை, கொழும்பு |
| 5 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிவகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | ஐயக்கச்சி | .. திரு. ஏ. விஜயரட்ணம், "மகேஸ்வரி" விலாஸ், கிளிநொச்சி |
| 5 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிவகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | யாழ்ப்பாணம் | .. திரு. எஸ். தாமோதரம்பிள்ளை, கிராண்ட் பசார், மரக்கறி மார்கட், யாழ்ப்பாணம் |
| 4 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிவகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள் புது மீன்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | சம்பன்குண்டு | .. திரு. எஸ். தாமோதரம்பிள்ளை, மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | தரைப்படைக்கு மட்டும் மரக்கறிவகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை பொருட்கள், புது மீன்கள், இறைச்சி ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கு | முல்லைத்தீவு | .. திரு. எஸ். தாமோதரம்பிள்ளை, மேற்குறிப்பிட்டவர் |
| 3 .. | தரைப்படைக்கு விறகுக்கட்டை விநியோகஞ் செய்வதற்கு .. | மன்னூர் | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 3 .. | ஷை .. .. .. | சிலாபத்துறை | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | முல்லைத்தீவு | .. மெஸஸ் விக்கிரமரட்ணஸ், மேற்குறிப்பிட்டவர் |
| 5 .. | ஷை .. .. .. | சம்பன்குண்டு | .. திரு. எஸ். எஸ். செல்லதுரை, மேற்குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | யாழ்ப்பாணம் | .. திரு. எஸ். சுப்பிரமணியம், கண்டி வீதி, பலாலி |
| 5 .. | ஷை .. .. .. | ஐயக்கச்சி | .. திரு. எஸ். சுப்பிரமணியம், மேற்குறிப்பிட்டவர் |

| இடைக்கப் பட்ட கேள்விப் பத்திரங் களின் தொகை | சேவை | இடம் | சித்தியடைந்துள்ள கேள்வியாளர் |
|---|---|---|---|
| 6 .. | தரைப்படைக்கு மட்டும் துவைத்தல் சேவைகள் விநியோகிப்ப தற்கு | கொழும்பு .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, பிரண்டியவத்தை, வெல்லம்பிட்டிய |
| 4 .. | ஷை .. .. .. | பணுகொடை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 6 .. | ஷை .. .. .. | தியத்தலாவை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 6 .. | ஷை .. .. .. | திருகோணமலை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | யாழ்ப்பாணம் .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | முல்லைத்தீவு .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | சிலாபத்துறை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | அம்பாரை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | யக்கச்சி .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | உடவலவை .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | சம்பன்குண்டு .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 5 .. | ஷை .. .. .. | ஐபதவிய .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 4 .. | ஷை .. .. .. | மன்னூர் .. | திரு. டப்ளிவ். டி. பெர்ணண்டு, மேற் குறிப்பிட்டவர் |
| 7 .. | ஷை .. .. .. | கடுகுருந்தை .. | திரு. ஆர். டி. பெர்ணண்டு, 12/3, சாலமுல்ல வீதி, வெல்லம்பிட்டிய |
| 5 .. | ஷை .. .. .. | கந்தளே .. | திரு. டியுடர் வீரசூரிய, 84/6, மாநகர வாசஸ்தலம், வேகந்தை, கொழும்பு 2 |
| 2 .. | தரைப்படை, அரச இலங்கை கடற்படை, அரச இலங்கை ஆகாயப் படை ஆகியவற்றிற்கு கூலியாட்கள், மலகூட வேலை ஆட்கள் ஆகியன விநியோகஞ் செய்வதற்கு | தியத்தலாவை .. | மெஸஸ் ஆமி என்ட் நேவி ஸ்டோர்ஸ், தியத்தலாவை |

மேலே குறிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரின் தீர்வுகளை கொழும்பு, பாலதக்ச மாவத்தயில் உள்ள தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. எஸ். ஆடிகல,
மேஜர் ஜெனரால்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
பாலதக்ச மாவத்தை,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 27 ந் உ.

1-219—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு உள்நாட்டு பிரதிநிதிகளிடமிருந்து ஸ்டாக் விலிருந்தாவது அல்லது குறைந்தது 2 மாதங்களுக்குள்ளாவது ஒரு டீசல் முன்பக்கம் என் லோடர் அமைக்கப்பட்டுள்ளது வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970, ஜனவரி மீ 31 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1970, ஜனவரி மீ 31 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிருப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்விவைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1970, ஜனவரி மாதம் 29 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு சனவரி மீ 9 ந் உ.

1-240—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## கச்சேரி–மொனருகலே

### ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப்பத்திரம்

மொனருகலே மாவட்டத்தில் இல. 1 ஸ்ரீ 9350 வில்லிஸ் ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ந் திகதி முற்பகல் 11.30 மணி வரை மொனருகலே அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மொனருகலே அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் வெற்றுப் பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பத்திரங்களில் அனுப்பப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மொனருகலே கச்சேரியிலோ அல்லது வேறு எக்கச்சேரியிலோ ரூபா 50 செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை மொனருகலே அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து கேள்விக்கான வெற்றுப்பத்திரங்களை 1970 ம் ஆண்டு ஜனவாரி மாதம் 26 ந் திகதி நண்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விகள் ஏற்றுக்கொண்டதாக அனுப்பப்படும் கடிதம் கிடைத்து ஐந்து நாட்களுக்குள் வாகனத்திற்குரிய முழுத்தொகையையும் செலுத்தத் தவறியவர்களின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கொடுபடமாட்டாது.

4. அனுமதிக்கப்பட்ட கேள்விக்காரர் வாகனத்திற்குரிய முழுத் தொகையையும் செலுத்திய அன்றே வாகனத்தை அகற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்யவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது சிலவற்றையோ எந்தவிதமான காரணமுமில்லாமல் நிராகரிப்பதற்குரிய அதிகாரம் மொனருகலே அரசாங்க அதிபருக்குண்டு.

6. கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறை சீல் வைக்கப்பட்டு " ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விகள் " என்று உறையின் இடது மேல் மூலையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது மொனருகலே கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.

7. காரியாலய நேரங்களில் வாகனத்தை மொனருகலே கச்சேரியில் பார்வையிடலாம்.

8. கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மொணருகலே கச்சேரியில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

9. மேலதிக விபரங்களை மொனருகலே அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பி. ஜீ. புஞ்சிகேவா,
அரசாங்க அதிபர்,
மொனருகலே மாவட்டம்.

மொனருகலே கச்சேரி,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 21 ந் உ.

1–249—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888.

---

## நீர்ப்பாசன திணைக்களம்—மாத்தறை உப பிரிவு

1969–70 நிதி வருட பொதி ஏற்றி இறக்கல் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் தங்கல்லையில் உள்ள பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு மாசி மாதம் 3 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 15,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும், பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கத்தகுதியுடையவர்கள்.

இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் மாத்தறை, காலி, அம்பாந் தோட்டை, திஸ்ஸ–மகாரகம ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளருடைய, அலுவலக நேரங்களில் 1970 ஆம் ஆண்டு தை மாதம் 31 ம் திகதி பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப் படுத்தி இக் கேள்விப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் அதே நீர்ப்பாசன பொறியியலாளருடைய அலுவலகத்தில் 25 ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்பட வேண் டும்.

இக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டின லும் போதுமானது. இவ்வேலைக்கான வாகனங்களும் கூலியாட்களும் வைத்திருப்பதாக உறுதிப்படுத்துவோருக்கே கேள்விப்பத்திரங்கள் வழங் கப்படும்.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் மாத்தறை உப பிரிவு நீர்ப்பாச்சன பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். டி. சி. குணவர்த்தன,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மாத்தறை உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மாத்தறை,
20.12.1969.

1–235—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## நீர்ப்பாசன திணைக்களம்—அம்பாரை உப–பகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும் பாக நீர்ப்பாசனப் பிரிவுக்கேள்விப்பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1970 ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங் கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடைய வராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| அ/1/69–70 | அம்பாறை உப–பிரிவு ஆற்றுப் பிரதேசத்தில் பரசடி அணைக்கட்டு அமைத்துத்தரல் | ரூ. ..75,000 .. | ரூ. 100 |

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாரை, கல்முனை அல்லது செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு தை மாதம் 27 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுத் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலை வியரங்களையும் அவற்றின் பெலுமதிகளையும் ஓர் பத்திறத்தில் வெளிப்ப டுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப் பத்திரம் வழங்கு முன் மேற்காட்டிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவரின் காரி யாலயத்திலோ அல்லது கச்சேரியிலோ, மேற்காட்டிய கேள்விப் பத்திர கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக் கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாரை உப நீர்ப் பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

என். ஜீ. தாமோதரம்,
பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர்,
அம்பாரை உப– பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மட்டக்களப்பு,
27.12.1969.

1—231—9.1.70 ந் திகதிய வர்த்மானி இல. 14,888

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உபபிரிவு

19.12.69 ல் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளிவந்த கேள்விப்பத்திரம் சம்பந்தமாக—

"புதிய பஸ்லேகல நகர கைத்தொழில் பகுதியிலும் குடியிருப்புப் பகுதியிலும் ரோட்டுப் போடுவது", சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கடைசித் திகதி 23.1.1970 வரையில் பின்போடப்பட்டிருக்கிறது.

கேள்விப்பத்திரங்கள் கொடுக்கும் கடைசித் திகதி 21.1.1970 ஆகும்.

ஏ. ரீ. ஜே. டீ. பின்ரோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கண்டி உப பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
குண்டசாலே,
26.12.1969.

1–234—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## நீர்ப்பாசன இலாகா—முல்லைத்தீவு உப பிரிவு

வவுனியா வட பிரிவு பெரும்பாக பொறியியலாளர் 1969/70 நிதி ஆண்டுகட்கு முல்லைத்தீவு உப-பிரிவின் கீழ் பொருட்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மாசி மாதம் 1 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

ரூபா 25,000/- க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ இத் திணைக்களத்தில் பதிந்துள்ள கொந்தராத்துக்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் அல்லது கிராம அபிவிருத்திச் சங்கங்களும் அத்துடன் தேவைக்குரிய லொறிகள் வைத்திருப்பவர்களுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு தை மாதம் 12 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு தை மாதம் 28 ம் திகதி வரை கந்தோர் நேரங்களில் நீர்பாசன பொறியியலாளர் முல்லைத்தீவு உப-பிரிவு/வவனியா உப-பிரிவு/மன்னார் உப-பிரிவு/வவுனிக்குளம் உப பிரிவு/யாழ்ப்பாணம் உப-பிரிவு காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்களது பதிவுப்புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் தற்சமயம் மேற் கொண்டுள்ள வேலை விபரங்களும், தங்களிடம் இருக்கும் லொறிகளின் பதிவு விபரங்களும் அந்த லொறிகளில் ஏற்றக்கூடிய பாரம் போன்ற விபரங்களும் தர வேண்டும். இந்த விபரங்கள் அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமா என்பதை நிர்ணயிக்க உதவும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் மேற்காட்டிய நீர்பாசன பொறியியலாளர்களின் அலுவலகங்களிலோ அல்லது கச்சேரிகளிலோ கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 50/- செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்ட வேண்டும்.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவையும் கீழ்க்குறிப்பிட்டிருக்கும் நீர்பாசனப் பொறியியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சண்முகராசா,
நீர்பாசன பொறியியாளர்
முல்லைத்தீவு உப-பிரிவு.

நீர்பாசன அலுவலகம்,
ஒட்டுசுட்டான்,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 21 ந் உ.

1–286—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

*உயிலங்குளப் பிரவேச பாதை அமைத்தல்*

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 19 . . ம் ஆண்டு . . . . மாதம் . . . . ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய வேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி (5.2.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் இடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "உயிலங்குளப் பிரவேச பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் இடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி (5.2.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

ந. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1969 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ம் திகதி.

1–261—9.1.70 ந் திகதிய வர்த்தமான இல. 14,888

## சிறிய நீர்ப்பாசன வேலைகள்

### அம்பாறை மாவட்டம்

இதன்கீழ் கூறப்படும் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறிய நீர்ப்பாசன வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் அம்பாறை மாவட்ட கமத்தொழில் சேவை உதவி ஆணையாளரால் 1970 ம் ஆண்டு தை மாதம் 24 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மனுப்பத்திரங்கள் க.சே.உ. ஆணையாளர் காரியாலயத்தில் 23.1.1970 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கச்சேரியில் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/- செலுத்தி பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரங்களில் மாத்திரம் விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் "கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர், கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர் அலுவலகம், அம்பாறை" என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு அனுப்பத்தவறிய விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதி கேள்விப்பத்திரங்களை எமது காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும். கேள்விப்பத்திர தபால் உறையின் மேற்புற இடப்பக்கத்தில் "கரடியன் குளம் புனருத்தாரண வேலை" எனக்குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும்.

1970 ம் ஆண்டு தைமாதம் 25 ந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். குறித்த நேரத்தில் விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

| வேலையின் விபரம் | | கிராம பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பகுதி |
|---|---|---|
| அக்கரைப்பற்று புனருத்தாரணம் | கரடியன்குளம் | அக்கரைப்பற்று |

சுமணசிறி உறுகல்ல,
கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர்,
அம்பாறை மாவட்டம்.

1–258—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## கமத்தொழில் திணைக்களம்

### வவுனியா கமத்தொழில் பண்ணையில் நெல் அறுவடை செய்தல் கொண்டு சென்று சூடு வைத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள்

மேற் குறிப்பிடப்பட்ட வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970.1.28 ந் திகதி காலை 10 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) அவர்களால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஐ.ஆர். 8 நெல், 10 ஏக்கரிலும் எச். 4 நெல் 35 ஏக்கரிலும் அறுவடை செய்தல், கொண்டு செல்லல், சூடுவைத்தல்.

பண்ணை அதிபர் அல்லது அவரது பிரதிநிதியோ குறிப்பிடும் இடத்திலேயே சூடு வைத்தல் வேண்டும். நெல்மணிகளுக்குப் பங்கம் ஏற்படாமலும், வெவ்வேறு வகையான நெல் மணிகள் ஒன்றோடொன்று கலக்காமலும் இருத்தல் வேண்டும். நெற்பயிரை அறுவடை செய்யும் பொழுது அதன் அடி 6" மேற்படாமல் இருத்தல் வேண்டும். பண்ணை அதிபர் குறிப்பிடும் திகதிக்குள் மேற்படி வேலையைச் செய்து முடித்தல் வேண்டும். தாமதமாகும் ஒவ்வொரு நாளும் கேள்விப் பத்திரங்கள் கோருவோர் தன்பிணையாகக் குற்றப்பணம் செலுத்துதல் வேண்டும்.

எல்லா வேலைகளும் பண்ணை முகாமையாளர் திருப்தியடையும் வண்ணம் இருத்தல் வேண்டும். குறைந்தது நாள் ஒன்றுக்கு 4 ஏக்கரில் நெல் அறுவடை நடைபெறுதல் வேண்டும். அறுவடை செய்த தினத்தில் இருந்து 2 நாட்களுக்குள் குவிக்கப்படுதல் வேண்டும். மழையினால் பாதிப்பு ஏற்படுமெனக் கண்டால், பண்ணை அதிபர் தீர்மானப்படி அவர் குறிப்பிடும் இடத்தில் சூடு வைத்தல் வேண்டும். கொந்தராத்துக்காரரின் கவலையீனத்தால் நெல் மணிகளுக்குச் சேதம் உண்டானால் அவற்றின் பெறுமதி கொந்தராத்துக்காரரிடமிருந்து அறவிடப்படும்.

கேள்விப்பத்திரக்காரர் ஒவ்வொரு இனத்திலும் ஏக்கர் ஒன்றுக்கு அறவிடும் தொகையைக் குறிப்பிட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விக்காரர் முழுவதையும் அல்லது ஒரு பகுதியை ஏற்கத் தயாராக இருத்தல் வேண்டும். எல்லா வேலையும் பண்ணை அதிபர் அல்லது அவரரது பிரிதிநிதியின் தீர்மானப்படி ஒவ்வொரு பகுதிக்கும் நியமிக்கும் தினத்துள் செய்தல் வேண்டும்.

அறுவடை 1. 2.1970 ம் திகதி ஆரம்பமாகி 1970 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் முடிவிலோ அதற்கு முன்னரோ முடிவடைதல் வேண்டும். வேலை தொடங்கும் திகதி பண்ணை அதிபரால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில், கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேவ்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க்குறிப்பு "...........(சேவையின் பெயரு நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவு திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கோள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக்கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத்தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகாலம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமாக பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலிவில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாயாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்கமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரரிகள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கொரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கும்முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளளாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும் ப.)

பேராதனை

1—251/1—9.1.70 ந் திகதிய வர்த்மானி இல. 14,888

## கமத்தொழில் திணைக்களம்

**அரசாங்கப்பண்ணைகளில் எச் 4 நெல் அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடு வைத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் **28.1.70** ஆம் திகதி மு. ப. **10** மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கமத்தொழில் அதிகாரியினுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

கீழ்க்காணப்படும் பண்ணைகளில் **எச் 4** அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடு வைத்தல், நெல் அறுவடை செய்து முடிவடையச் செய்யும் காலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | நெல் அறுவடையைச் செய்யும் தினம் | இனம் ஏக்கர் | நெல் அறுவடை செய்து முடிக்க வேண்தினம் |
|---|---|---|---|
| பரந்தன் பண்ணை .. | 3. 2.70 | .. எச் 4 7½ (பகுதி–1) | 5. 2.70 |
| | 5. 2.70 | .. எச் 4 7½ (பகுதி 2) | 7. 2.70 |
| | 8. 2.70 | .. எச் 4 6 (பகுதி 3) | 10. 2.70 |
| | 11. 2.70 | .. எச் 4 8 (பகுதி 4) | 14. 2.70 |
| கிளிநொச்சிப்பண்ணை | 9. 2.70 | .. எச் 4 10 (பகுதி 1) | 14. 2.70 |
| | 15. 2.70 | .. எச் 4 16 (பகுதி 2) | 22. 2.70 |
| | 1. 3.70 | .. எச் 4 05 (பகுதி 3).. | 4. 3.70 |
| | 3. 3.70 | .. எச் 4 07 (பகுதி 4).. | 6. 3.70 |
| | 7. 3.70 | .. எச் 4 07 (பகுதி 5).. | 9. 3.70 |
| முருங்கன் பண்ணை | 10. 2.70 | .. எச் 4 20 (பகுதி 1).. | 16. 2.70 |
| | 6. 2.70 | .. எச் 4 34 (பகுதி 2).. | 22. 2.70 |
| | 10. 3.70 | .. எச் 4 5½ (பகுதி 3).. | 15. 3.70 |
| கரடியனுறு பண்ணை | 9. 2.70 | .. எச் 4 22 (பகுதி 1).. | 16. 2.70 |
| | 18. 2.70 | .. எச் 4 18 (பகுதி 2).. | 23. 2.70 |
| | 25. 2.70 | .. எச் 4 12 (பகுதி 3).. | 28. 2.70 |
| | 1. 3.70 | .. எச் 4 06 (பகுதி 4).. | 3. 3.70 |

பண்ணை அதிபரினுலோ அல்லது அவரது பிரதிநிதியாலோ குறிப்பிடும் இடத்திலேயே சூடு வைத்தல் வேண்டும். எந்த ஒரு நிலையிலும் நெல் மணிகளுக்கு ஊறு நிகழ்வதற்கும் நட்டம் ஏற்படுவதற்கும் இடங் கொடுக்கக் கூடாது. நெல் அறுவடை செய்ததன் பின்பு வயலில் மீதியாக இருக்கும் அடிக்கட்டை 6 அங்குலத்திற்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும்.

குறிப்பிட்ட காலத்துக்குள் நெல் அறுவடை செய்து முடிப்பதுடன், குறிப்பிட்ட தினத்தின் பின் தாமதாகும் ஒவ்வொரு நாளும் தண்டனையாக நெற்பயிருக்கு ஏற்படும் நட்டத்திற்குச் சமமான அபராதம் கொந்தராத்துக்காரரினுல் செலுத்தப்பட வேண்டும். (பயிரின் நட்டம் கணக்கிடுவது, நெல் அறுவடை செய்யும் கடைசித் திகதிக்குப் பின்பு நெல் அறுவடை செய்யப்படாதிருக்கும் எல்லா ஏக்கருக்கும், ஒவ்வொரு ஏக்கருக்கும் நாளுக்கு 1½ புசல் வீதமாகும்) எல்லா நடவடிக்கைகளும் பண்ணை முகாமையாளர் திருப்தி அடையும் வண்ணம் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் நாள் ஒன்றுக்கு 4 ஏக்கரில் நெல் அறுவடை செய்தல் வேண்டும். மழையினுல் பங்கம் ஏற்படாது விடின் அறுவடை செய்த தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள் சூடு வைத்தல் வேண்டும். மழையினுல் பாதிப்பு ஏற்படுமெனக் கண்டால் பண்ணை அதிபர் எவ்விடத்தில் சூடு வைத்தல் வேண்டுமென்பதைத் தீர்மானிப்பார். கொந்தராத்துக்காரரின் கவலையினுலோ அல்லது அசட்டையினுலோ நெல்மணிகளுக்கு ஊறு விளையுமாயின் அச்சேதத்தின் பெறுமதி கேள்விக்காரரிடமிருந்து அறவிடப்படும்.

இது சம்பந்தமாக அறவிடும் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறாக ஒரு ஏக்கருக்கு என்ற அடிப்படையிலேயே குறிப்பிடுதல் வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் முழு ஏக்கரையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்கத் தயாராய் இருத்தல் வேண்டும். பண்ணை அதிபரினதோ அல்லது அவரது பிரதிநிதியினதோ அறிவுறுத்துரைக்கு அநுகூலமாக அவரினுல் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் அல்லது பங்குக்குமாக நியமிக்கப்பட்ட தினத்தினுள் வேலையைச் செய்து முடித்தல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களினும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும் ரூபா 10 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ)யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு ...................... " (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப் பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ) தொடர்பு கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன் தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா போதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினுல் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு.ஆ)கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாரோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவர்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாதுவேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது, இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளர் நிதியால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கும் உரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர். (க.க.வும் ப.)

1–251/2—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளுக்கு இரண்டு தண்ணீர்ப்பம்புகளும் தெளி கருவி ஒன்றும் விநியோகித்தல் பாரங்கொடுத்தலுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம் கமத்தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) காரியாலயத்திலே கமத்தொழில் அதிகாரியினால் கிளிநொச்சி, வவுனியா ஆகிய பண்ணைகளுக்கு இரு தண்ணீர்ப் பம்புகளும் முருங்கன் கமத்தொழிற் பண்ணைக்கு தெளிகருவி ஒன்றும் விநியோகித்தல் பாரங்கொடுத்தலுக்கான கேள்விப்பத்திரங்களை 1970.1.28 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பேராதனை கமத்தொழிற்றிணைக்களத்தின் பிரதான காரியாலயத்திலோ அல்லது எந்த ஒரு கச்சேரியிலும் ரூபா 10/ஐ கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ)பெயரில் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை யாழ்ப்பாணம் கமத்தொழிற் காரியாலயத்திலே கமத்தொழில் அதிகாரிக்கு (ப. மு. ஆ.) சமர்ப்பிப்பின், கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் முடிவுத்திகதிக்கு முன்தினம் நண்பகல் 12 மணி வரையும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு இந்த அரசாங்க வர்த்தமானியில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்.

பீ. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்,
(கமத்தொழிற் கல்வியும் பண்ணையும்).

கமத்தொழிற் திணைக்களம், பேராதனை,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 19 ந் உ.

1–251—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### அநுராதபுர உபபிரிவு

அநுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள கட்டியாவ வழிகாட்டி (பயிலட்) வாய்க்கால் புனருத்தாரண வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970ம் ஆண்டு தை மாதம் 24 ம் திகதி (24.1.70) காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின் திறக்கப்படும்.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 38,500 க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்குரிய வெற்றுப் பத்திரங்கள் அநுராதபுரம், மகா கந்தராவ, புதவிய, இராசாங்கனை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு தை மாதம் 9 ம் திகதி முதல் 1970 ம் ஆண்டு தை மாதம் 20 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக ரூபா 50 ஐ கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசன கந்தோரில் செலுத்த வேண்டும். இத்தொகையை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

4. மேலதிக விபரங்கள் அநுராதபுர நீர்ப்பாசன உப பிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அநுராதபுர உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
அநுராதபுரம்,
1969 ம் ஆண்டு மார்கழி 27 ம் திகதி.

1–237—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## பெருந்தெருக்கள் திணைக்களம்

### வெற்றுச் சீமேந்து உறைகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள்

1969.4.1 ஆம் திகதி தொடக்கம் 1970.3.31 ஆம் திகதி வரையுள்ள காலத்துக்குள் பாலமமைப்புப் பிரதான பொறியியலாளரின் மாவட்டங்களிலுள்ள வெற்றுச் சீமேந்து உறைகளைக் கொள்வனவு செய்து அகற்றுவதற்கான கேள்விப்பத்திரங்கள், இரத்மலானை பெருந்தெருக்கள் திணைக்களப் பாலமமைப்பு அலுவலகக் கேள்விச்சபைத் தலைவரால் 1970 ஜனவரி 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். 1970 ஜனவரி 31 ஆம் திகதி காலை 11.05 மணிக்குப் பிரதேசக் கேள்விச்சபைத் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் அவை திறக்கப்படும். அப்போது கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

2. பாலமமைப்புப் பிரதான பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகளை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திர வைப்புப்பணம் ரூபா 100 க்கான பற்றுச்சீட்டை 1970.1.25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முன் சமர்ப்பித்ததும் பாலமமைப்புப் பிரதான பொறியியலாளரால் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. கேள்விக்குரிய வைப்புப் பணத்தைக் கொழும்பு 1, கோட்டை, பெருந் தெருக்கள் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் அல்லது கொழும்பிற்கு வெளியில் விரும்பிய கச்சேரியில் செலுத்தலாம். 1970 ஜனவரி 25 ஆம் திகதிக்குப் பின் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்வோர், பிந்திய ஒவ்வொரு நாளுக்கும், நாளின் ஒரு பகுதிக்கும் ரூபா 10 வீதம் திரும்பப் பெறமுடியாத பிந்தற்கட்டணம், இரத்மலானை பாலமமைப்புப் பிரதான பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ம. சந்திரசேன,
பாலமமைப்புப் பிரதான பொறியியலாளர்.

பெருந்தெருக்கள் திணைக்களம்,
இரத்மலானை,
27.12.69.

1–225—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## கட்டிடத் திணைக்களம்

புத்தள மாவட்டத்தில் 1970 ம் ஆண்டில் "எ" பிரிவில் உள்ள அரசாங்கக் கட்டிட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுர கட்டிடத் திணைக்கள வடமத்திய பகுதி அத்தியட்சக பொறிவலாளரின் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 3 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. கட்டிடத் திணைக்கள புத்தளம் மாவட்டப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக் கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாயிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 35,500/– க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 50/– (ஐம்பது) செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங் களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புப வர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தைக் கொழும்பு கோட்டையி லுள்ள கட்டிடத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எ. ஆர். இரத்தினராசா,
அத்தியட்சக பொறிவலாளர் (கட்டிடங்கள்),
வடமத்திய பகுதி.

கட்டிடத் திணைக்களம், அனுராதபுரம்.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 28 ந் உ.

1–255/1—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## கட்டிடத் திணைக்களம்

புத்தள மாவட்டத்தில் 1970 ம் ஆண்டில் "பி" பிரிவில் உள்ள அரசாங்கக் கட்டிட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுர கட்டிடத் திணைக்கள வடமத்திய பகுதி அத்தியட்சக பொறிவலாளரின் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 3 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. கட்டிடத் திணைக்கள புத்தளம் மாவட்டப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக் கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாயிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 30,200/– க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 50/– (ஐம்பது) செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங் களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புப வர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தைக் கொழும்பு கோட்டையி லுள்ள கட்டிடத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களி லுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எ. ஆர். இரத்தினராசா,
அத்தியட்சக பொறிவலாளர் (கட்டிடங்கள்),
வடமத்திய பகுதி.

கட்டிடத் திணைக்களம், அனுராதபுரம்.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 28 ந் உ.

1–255/2—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## கட்டிடத் திணைக்களம்

புத்தள மாவட்டத்தில் 1970 ம் ஆண்டில் "சி" பிரிவில் உள்ள அரசாங்கக் கட்டிட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுர கட்டிடத் திணைக்கள வடமத்திய பகுதி அத்தியட்சக பொறிவலாளரின் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 3 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. கட்டிடத் திணைக்கள புத்தளம் மாவட்டப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக் கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாயிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 10,500/– க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25/– செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங் களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புப வர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தைக் கொழும்பு கோட்டையி லுள்ள கட்டிடத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களி லுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எ. ஆர். இரத்தினராசா,
அத்தியட்சக பொறிவலாளர் (கட்டிடங்கள்),
வடமத்திய பகுதி.

கட்டிடத் திணைக்களம், அனுராதபுரம்.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 28 ந் உ.

1–255/3—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு மாசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ந் திகதி 1970 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லாது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர் வவுனியா ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**— கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாப் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், வவுனியா என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும் இடதுபக்கத்து கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவர்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**— கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் குழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம்கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவாதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

பொ. இரத்தின சபாபதி,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

வவுனியா, 1969 ந் ௵ டிசெம்பர் மீ 31 ந் உ.

### குறித்த அட்டவணை

| (1) | (2) | (3) | (4) | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாபனங்கள் வவுனியாப் பகுதி | கேள்விக் கட்டுப் பணம் ரூ. | பிணை வைப்புப் பணம் ரூ. | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
| செட்டிகுளம் கிராமிய ஆஸ்பத்திரி | 100 | 800 | 24.1.70 மு.ப. 10.00 மணி | 670 | — | 340 | 1,320 | 750 | — | 360 | 1,440 |
| பேசாலை கிராமிய ஆஸ்பத்திரி | 100 | 600 | | 660 | — | 310 | 1,260 | 580 | — | 280 | 1,100 |
| சிலாபத்துறை கிராமிய ஆஸ்பத்திரி | 100 | 600 | | 700 | — | 690 | 1,070 | 1,100 | — | 1,100 | 1,550 |
| மாங்குளம், பிரசவ விடுதி | 100 | 400 | | 230 | — | 460 | 930 | 150 | — | 280 | 590 |
| பூவரசங்குளம் பிரசவ விடுதி | 100 | 400 | | 410 | — | 210 | 810 | 340 | — | 170 | 710 |
| பாவற்குளம் பிரசவ விடுதி | 100 | 400 | | 370 | — | 180 | 740 | 90 | — | 50 | 180 |
| புதுகுடியிருப்பு கி.ஆ | 100 | 600 | | 500 | — | 450 | 1,260 | 910 | — | 970 | 2,440 |

1–232—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப் படும்.

வடகாட்டுக்குப் பிரவேசப் பாதை அமைத்தல்.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு மாசி மாதம் 4 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங் களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்பு வோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி (5.2.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "வடகாட்டுக்குப் பாதை அமைத் தல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லை யின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத் துக்கொள்ளப்படமாட்டா.

4 இக் கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி (5.2.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப் படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட் களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தி யாக முடியும் வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப் படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1969 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ம் திகதி.

1–260—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

---

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு மாசி மாதம் 20 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) தாமரைக்குளம்—மினிக்கன் பிரவேசப்பாதை—கட்டம் B—பகுதி I ம் II ம்.

(2) தாமரைக்குளம்—மினிக்கன் பிரவேசப் பாதை—கட்டம் B—பகுதி III

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு மாசி மாதம் 19 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங் களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்த காரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச் சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண் டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ம் திகதி (20.2.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக் கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ் வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "தாமரைகுளம்—மினிக்கன் பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேணடும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ம் திகதி (20.2.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப் படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பபியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும் படி எழுத்துமூலம் அறிவிக்கபபடுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட் களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட் டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப் படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1969 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ம் திகதி.

1–289—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14.888

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை
## 1.3.70 தொடக்கம் 30.9.70 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகளில் 1.3.70 தொடக்கம் 30.9.70 வரைக் குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளுவிற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடை முறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 21.3.69 ம் தேதி பிரசுரிக்கப்பட்ட 14,840 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத்தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் "வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1969/70" என்று குறிப்பிட்டு 1970 ஆண்டு ஜனவரி மாதம் 27 திகதி அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும் எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்கள் அனுப்புவதற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள். ஐந்து பேருக்கதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர் :—

(அ) நேர்முகத்தில் சமூகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத் துடன் கேள்விப்பத்திரம் அனுப்பாவிடில் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணி யின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25% குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம். அல்லது வவுனியா கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடது பக்க மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரிப பற்றுச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழகக நேரிடும்.

7. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிக்கப்பட்ட பிணைப்பணத்தை செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில், தான் எந்த இடத்தைத் தவறணையாகத் தெரிவு செய்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள்—1.3.70—30.9.70).

| இலக்கமும் இடமும் | தவணை உள்ளூர்ப்பகுதி | கேள்வி ஏற்கும் நேரமும் திகதியும் |
|---|---|---|
| 2. வலையன்மடம் .. | வலையன்மடம் கிராம எல்லைக்குள் | 27.1.70 காலை 10.30மணி |
| 6. அலம்பில் .. | அலம்பில் கிராம எல்லைக்குள் | 27.1.70 காலை 10.45மணி |

பீ. சீ. பெரேரா,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 28 ந் உ.

1-284—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,888

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1969–70 ம் ஆண்டுக்குரிய துறைவரி மறு விற்பனவு

1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறையில் ஆயவரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வழங்குவதற்குமான கேள்விப்பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட்பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா நூறு (100/-) பிணையாகக் கட்டப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறான பற்றுச்சீட்டு காட்டுமிடத்து மட்டக்களப்பு கச்சேரியில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ந் திகதிக்குமுன் வழங்கப்படும் மாதிரிப்பத்திரங்களின் மேலேயே கேள்விபபத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

" மட்டக்களப்பு மாவட்டத்தில் ............ (இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறைவிற்பனவு " என்று இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு, முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதி கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமூகம் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தருத்தை திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினாலோ பிரிவுக் காரியாதிகாரியினாலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக்கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத்தகுதியுள்ளதென்றும் கேள்விப் பணத்தில் மூன்றில் ஒருபங்கை பிணைப்பணமாகக் கட்டக்கூடிய நிதிவசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் சமர்பிக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனைகளுக்கிணங்கக் கையொப்பமிட்டு வாங்கிய பெறுமதியில் மூன்றில் ஒருபங்கை பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணை கட்ட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணைகட்டுவதற்கோ, பிணை உறுதிக்கு தொகையைக் கட்டுவதற்கு தவறுமிடத்து அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின் கீழ் எவ்விதகொந்தருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். இவ்விதி விலக்கைத்தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தருத்துக்காரரினால் அல்லது கொந்தருத்துக்காரர்களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டுப் பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப்பத்திரப் பணம் மீட்டுக் கொள்ளப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாதைகள் வேலைசெய்யும் துறைகளுக்குப் பாதைகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப்படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்கவேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டுசெல்லும் சேவகர்களும் அரசாங்க வாகனங்களும் துறைக்கூலி செலுத்தவேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபால் சேவகரிடமிருந்து அரசாங்க வாகனங்களிடமிருந்தும் துறைக்கூலி ஏற்கக்கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

எட்கார் பொன்னுத்துரை,
மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

கச்சேரி,
மட்டக்களப்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 27 ந் உ.

| துறையின் பெயர் | பெ. இ. உ. பிரிவு | கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி |
|---|---|---|
| வலையிறவு .. | ம. வடக்கு. பெ. இ. உ. பிரிவு | 10.00 மு.ப. |

1-256—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசத்தாருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | 2.1.70 | வெள்ளி | .. | 26.12.69 | வெள்ளி | பி. [illegible] | 3.30 |
| | | 9.1.70 | வெள்ளி | .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | [illegible] |
| | | 16.1.70 | வெள்ளி | .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | | 23.1.70 | வெள்ளி | .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | | 29.1.70 | வியாழன் | .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| **பெப்புருவரி** | .. | 5.2.70 | வியாழன் | .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | | 13.2.70 | வெள்ளி | .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | | 20.2.70 | வெள்ளி | .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 27.2.70 | வெள்ளி | .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| **மாச்சு** | .. | 5.3.70 | வியாழன் | .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | | 13.3.70 | வெள்ளி | .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | | 20.3.70 | வெள்ளி | .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 26.3.70 | வியாழன் | .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.